ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா₃ந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ நிலையிடம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ நிலையிடம் ॥

திருமாலின் திருவவதாரங்களில் ஈடுபடுதல்

‡நிலையிடம் எங்கும் இன்றி நெடுவெள்ளம் உம்பர்⋆
வள நாடு மூட இமையோர்⋆
தலையிட மற்றெமக்கோர் சரண் இல்லை என்ன⋆
அரண் ஆவன் என்னும் அருளால்⋆
அலை கடல் நீர் குழம்ப அகடாட ஓடி⋆
அகல் வான் உரிஞ்ச⋆ முதுகில்
மலைகளை மீது கொண்டு வரு மீனை மாலை⋆
மறவாதிறைஞ்சென் மனனே! (1)

செரு மிகு வாள் எயிற்ற அரவொன்று சுற்றித்⋆
திசை மண்ணும் விண்ணும் உடனே⋆
வெருவர வெள்ளை வெள்ளம் முழுதும் குழம்ப⋆
இமையோர்கள் நின்று கடைய⋆
பரு வரை ஒன்று நின்று முதுகில் பரந்து⋆
சுழலக் கிடந்து துயிலும்⋆
அருவரை அன்ன தன்மை அடல் ஆமையான⋆
திருமால் நமக்கோர் அரணே (2)

தீதறு திங்கள் பொங்கு சுடர் உம்பர்
உம்பர்⋆ உலகேழினோடும் உடனே⋆
மாதிர மண் சுமந்து வட குன்றும் நின்ற⋆
மலையாறும் ஏழு கடலும்⋆
பாதமர் சூழ் குளம்பின் அக மண்டலத்தின்⋆
ஒருபால் ஒடுங்க வளர் சேர்⋆
ஆதி முன் ஏனமாகி அரணாய மூர்த்தி⋆
அது நம்மை ஆளும் அரசே (3)

தளையவிழ் கோதை மாலை இருபால் தயங்க⋆
    எரி கான்றிரண்டு தறு கண்⋆
அளவெழ வெம்மை மிக்க அரியாகி அன்று⋆
    பரியோன் சினங்கள் அவிழ⋆
வளை உகிர் ஆளி மொய்ம்பில் மறவோனதாகம்⋆
    மதியாது சென்றொர் உகிரால்⋆
பிளவெழ விட்ட குட்டம் அதுவைய மூடு⋆
    பெரு நீரின் மும்மை பெரிதே (4)

வெந்திறல் வாணன் வேள்வி இடம் எய்தி⋆ அங்-
    கோர் குறளாகி மெய்ம்மை உணர⋆
செந் தொழில் வேத நாவின் முனியாகி வையம்⋆
    அடி மூன்றிரந்து பெறினும்⋆
மந்தரமீது போகி மதி நின்றிறைஞ்ச⋆
    மலரோன் வணங்க வளர் சேர்⋆
அந்தரம் ஏழினூடு செலவுய்த்த பாதம்⋆
    அது நம்மை ஆளும் அரசே (5)

இரு நில மன்னர் தம்மை இரு நாலும் எட்டும்⋆
    ஒரு நாலும் ஒன்றும் உடனே⋆
செரு நுதலூடு போகி அவர் ஆவி மங்க⋆
    மழுவாளில் வென்ற திறலோன்⋆
பெரு நில மங்கை மன்னர் மலர் மங்கை நாதர்⋆
    புலமங்கை கேள்வர் புகழ் சேர்⋆
பெரு நிலம் உண்டுமிழ்ந்த பெரு வாயராகி⋆
    அவர் நம்மை ஆள்வர் பெரிதே (6)

இலை மலி பள்ளி எய்தி இது மாயம் என்ன⋆
    இனமாய மான் பின் எழில் சேர்⋆
அலை மலி வேல்கணாளை அகல்விப்பதற்கு⋆
    ஓர் உருவாய மானை அமையா⋆
கொலை மலி எய்துவித்த கொடியோன் இலங்கை⋆
    பொடியாக வென்றி அமருள்⋆

சிலை மலி செஞ்சரங்கள் செலவுய்த்த நங்கள்⋆
    திருமால் நமக்கோர் அரணே (7)

முன் உலகங்கள் ஏழும் இருள்மண்டி உண்ண⋆
    முதலோடு வீடும் அறியாது⋆
என்னிது வந்ததென்ன இமையோர் திகைப்ப⋆
    எழில் வேதம் இன்றி மறைய⋆
பின்னையும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கி⋆
    இருள் தீர்ந்திவ்வையம் மகிழ⋆
அன்னமதாய் இருந்தங்கறநூல் உரைத்த⋆
    அது நம்மை ஆளும் அரசே (8)

துணை நிலை மற்றெமக்கோர் உளதென்றிராது⋆
    தொழுமிங்கள் தொண்டர்! தொலைய⋆
உண முலை முன் கொடுத்த உரவோளதாவி⋆
    உகவுண்டு வெண்ணெய் மருவி⋆
பணை முலை ஆயர் மாதர் உரலோடு கட்ட⋆
    அதனோடும் ஓடி அடல் சேர்⋆
இணை மருதிற்று வீழ நடைகற்ற தெற்றல்⋆
    வினைப் பற்றறுக்கும் விதியே (9)

‡கொலை கெழு செம்முகத்த களிறொன்று கொன்று⋆
    கொடியோன் இலங்கை பொடியா⋆
சிலை கெழு செஞ்சரங்கள் செலவுய்த்த நங்கள்⋆
    திருமாலை வேலை புடை சூழ்⋆
கலி கெழு மாட வீதி வயல் மங்கை மன்னு⋆
    கலிகன்றி சொன்ன பனுவல்⋆
ஒலி கெழு பாடல் பாடி உழல்கின்ற தொண்டர்⋆
    அவர் ஆள்வர் உம்பர் உலகே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥